**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, (FTC) ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**CC.No. 46/2021 P.W. 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. குட்வின் ராய்** (கிளை மேலாளர், இந்தியன் வங்கி, நெய்யூர்) | **Caste** | : | |
| **Father's Name** | : | **த/பெ.** டோமியன் ராயப்பன் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day** 31.05.2024

**புகார்தாரர் தரப்பு முதல் விசாரணை**

1. புகார்தாரருக்கும் அவரது மனைவிக்கு எங்களது வங்கிக் கிளையில் கூட்டுக் கணக்கு உள்ளதா என்றால், இல்லை. தனிதனி கணக்கு உள்ளது. மேற்படி வாதியும் அவரது மனைவியும் எங்களுடைய வங்கியில் நகைக்கடன் வாங்கியதற்கான ஆவணங்கள் எதுவும் கொண்டு வந்துள்ளேனா என்றால், ஆம் கொண்டு வந்துள்ளேன். 19.06.2021 ம் தேதி புகார்தாரரின் மனைவி 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு நகைக்கடன் பெற்றதற்கான ஆவணங்களை கொண்டு வந்துள்ளேனா என்றால், ஆம் கொண்டு வந்துள்ளேன். **அதற்கான ஆவண நகல் EX.P6 ஆக குறியீடு செய்யப்பட்டது.** அந்த ஆவண நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது.

2. 31.05.2021 ம் தேதி புகார்தாரர் எனது வங்கியில் 1 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் நகைக்கடன் பெற்றதற்கான ஆவணத்தை கொண்டு வந்துள்ளேன். **அதற்கான ஆவண நகல் EX.P7 ஆக குறியீடு செய்யப்பட்டது.** அந்த ஆவண நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது.

3. 10.06.2021 ம் தேதி புகார்தாரர் 1 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் நகைக்கடன் பெற்றதற்கான பதிவுகளை கொண்டு வந்துள்ளேன். **அதற்கான ஆவணம் EX.P8 ஆக குறியீடு செய்யப்பட்டது.**

குறுக்கு விசாரணை

1. அடகு வைத்த நகைகளை எந்த எந்த தேதிகளில் திருப்பினார்கள் என்றால், 06.06.2022 ம் தேதி திருப்பியுள்ளார்கள். மேற்படி காலக்கட்டத்தில் 3 இலட்சம் தொகைக்கு மேற்பட்ட நகைகள் அடகு வைத்ததற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால், இல்லை.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
இரணியல்.